# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

**திருச்சிராப்பள்ளி-620 024.**

**முனைவர் க. கோபிநாத்** **தொலைபேசி : 0431-2407092**

**பதிவாளர்** **தொலைப்படி: 0431-2407045**


**கடித எண்.10965/D7/2018, நாள்: .07.2018**

**பெறுநர்**

முதல்வர்
பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற
அனைத்துக் கல்லூரிகள் / ஒப்புதல் பெற்ற நிறுவனங்கள்

அய்யா / அம்மா,

பொருள்: 2018 - 2019 - ஆம் கல்வியாண்டு - இளநிலை மற்றும் முதுநிலை - மாணவ மாணவிகள் சேர்க்கைக்கான தேதி நீட்டிப்பு - தொடர்பாக.

பார்வை: 1. 04.04.2018 நாளிட்ட இவ்வலுவலக சுற்றறிக்கை
2. 26.07.2018 துணைவேந்தர் அவர்களின் ஆணை.

*****

பார்வை (1)-ல் காணும் சுற்றறிக்கையின் தொடர்ச்சியாக, 2018-2019-ஆம் கல்வியாண்டிற்கான **இளநிலை** மற்றும் **முதுநிலை** பாடப்பிரிவுகளுக்கு மாணவ மாணவிகளின் சேர்க்கைக்கான இறுதி தேதி கீழ்கண்டவாறு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்க பணிக்கப்பட்டுள்ளேன்.

**இளநிலை - 27.07.2018 க்கு பதிலாக 10.08.2018 வரை**
**முதுநிலை - 03.08.2018 க்கு பதிலாக 17.08.2018 வரை**

**பல்கலைக்கழக விதிகளின்படி, ஒவ்வொரு பருவத்திற்கும் குறைந்தது கல்லூரி 90 வேலை நாட்கள் நடைபெற்று இருக்கவேண்டும்.** மேலும் தங்கள் கல்லூரியில் / ஒப்புதல் பெற்ற நிறுவனத்தில் சேர்க்கை பெற்ற மாணவ / மாணவிகளின் விவரங்கள் மற்றும் பல்கலைக்கழக கட்டணம் ஆகியவற்றை மாணவர் சேர்க்கை முடிவுற்று ஒரு மாதத்திற்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட விவரங்கள் மற்றும் கட்டணங்கள் வசூலித்த விவரங்கள் அனைத்தும் இளநிலை 10.09.2018 மற்றும் முதுநிலை 17.09.2018-ம் தேதிக்குள் பல்கலைக்கழகத்திற்கு கிடைக்கப் பெற்றால்தான் அம்மாணவ / மாணவியர்களின் பல்கலைக்கழகத் தேர்வுகள் தொடர்பான பணிகள் தொடங்க ஏதுவாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

பதிவாளர்

நகல்: தேர்வு நெறியாளர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி – 620 024.